# தூய்மை இயக்கத்தின் ஆட்சிக் குழுவின் முதல் கூட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 25 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (23.06.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கழிவு மேலாண்மை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட தூய்மை இயக்கத்தின் ஆட்சிக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் தினம்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தூய்மை இயக்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தினை செயல்படுத்திட தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (Clean Tamil Nadu Company Limited - CTCL)) என்ற அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது

இந்த இயக்கம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சிக் குழு, தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான செயற்குழு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான தூய்மைக் குழு மற்றும் வட்டார அளவில்/ நகர்ப்புற உள்ளாட்சி அளவிலான தூய்மைக் குழு கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

தூய்மை இயக்கத்தின் மாநில அளவிலான செயற்குழுவின் முதல் கூட்டம் 30.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

முதற்கட்டமாக, உலக சுற்றுச்சூழல் தினமான 5.06.2025 அன்று தமிழ்நாடு முழுவதும், தலைமைச் செயலகம், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநகரங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகிய 1,100 அலுவலகங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பலவிதமான கழிவுகளைச் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 593 டன் அளவுள்ள கழிவுகள் சேகரிக்கப்பட்டு இதுவரை சுமார் 60 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இந்த முன்னெடுப்பு பிற அரசுத்துறை நிறுவனங்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை இயக்கத்தின் ஆட்சிக் குழுவின் முதல் கூட்டம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இன்றையதினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள், அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களும், கழிவுகளை, உற்பத்தி ஆகின்ற இடங்களிலேயே தனித் தனியாக பிரித்து கையாள வேண்டும் என்றும், இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகள் குப்பைக் கிடங்குகளை மட்டுப்படுத்தி, புதிய கழிவுகளை குப்பைக் கிடங்குக்கு அனுப்புதை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

உள்ளாட்சி அமைப்புகளின் கழிவு மேலாண்மையை கண்காணித்து, நடுநிலையான முறையில் கருத்துகளை தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (CTCL) வழங்கிடவும், அத்துடன் 'Real-Time Data'-வை உள்ளாட்சி அமைப்புகள் பகிர வேண்டும் என்றும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொழில் நுட்ப தீர்வுகள் வழங்குவதற்கு தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்துடன் ஒன்றிணைந்து கழிவு மேலாண்மையிலிருந்து வருவாய் ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த தூய்மை இயக்கத்தின் நோக்கங்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சேரும் வகையில் பரப்புரை செய்ய வேண்டும் என்றும், இளைய தலைமுறையினரை கவரும் வகையில் இது அமைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். குப்பை கொட்டுகிற இடங்களை சுத்தம் செய்து, மரங்கள் நட்டு, மக்கள் பயன்படுத்தும் விதமாக தூய்மை முனைகளாக மாற்றிட மக்களை ஊக்குவித்திட வேண்டும் என்று தெரிவித்தார்.

முக்கியமாக, அனைத்து அரசுத் துறைகளும் தூய்மை தமிழ்நாடு நிறுவனத்துடன் ஒத்துழைத்து, தூய்மை இயக்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிட உறுதி செய்திட வேண்டும் என்றும், கழிவு மேலாண்மை செயல்பாடுகளில் உள்ளாட்சி அமைப்புகள் - N.G.O-க்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மூலமாக பொதுமக்கள் ஒத்துழைக்க சமூகரீதியாக ஊக்குவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மையில் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு. தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், நிதி ஆதாரம் மற்றும் வருவாய் ஈட்டும் செயல்பாடுகள், தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் அதன் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் தொடர்புடைய துறைகளின் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை –

# பேராவூரணி வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து கடனுதவிகளை வழங்கினார்!

தஞ்சாவூர் ஜூன் 25 -

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை (ம) பேராவூரணி வட்டத்திற்குட்பட்ட 6 இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம் நிகழ்ச்சிகள் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி க ளி ல் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமை வகித்தார். பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் முன்னிலை வகித்தார்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் பாலத்தளி குரூப் எண்ணானிவயல் நெல் கொள்முதல் நிலையத்திலும், பூவாளூர் கிழக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், களத்தூர் அய்யனார் கோவிலிலும், பெரியநாயகிபுரம் ஊராட்சி ஆவணம் சமுதாயக்கூடத்திலும், அம்மையாண்டி ஊராட்சி ஏனாதிகரம்பை அரசு உயர்நிலைப்பள்ளியிலும், பேராவூரணி வட்டம் சேதுபாவாசத்திரம் ஊமத்தநாடு ஊராட்சி உடையநாடு டி.ஜி.எல் திருமண மஹாலிலும் ஆகிய 6 இடங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 48 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 720 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பிலான சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கி கடனுதவிகளை வழங்கி உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டை வட்டத்தில் 6 இடங்களில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஏழை எளியோர் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமை பெண் திட்டம். இன்னுயிர் காப்போம், தமிழ்ப் புதல்வன் திட்டம், விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தாழ்த்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமை பெறுவதற்கு சட்டப் பாதுகாப்பையும் சமூக நீதியினையும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெற்றுத் தந்தார்கள். சமூக நீதியினையும் கல்வி உ ரி மை யி னை யு ம் தொடர்ந்து அக்கறையுடன் முதலமைச்சர் அவர்கள் காப்பாற்றி வருகிறார். பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

மேலும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மக்களுடன் முதல்வர் முகாமில் பதிவு செய்து உடனடி தீர்வாக தொழிலாளர் நலத் துறை சார்பில் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள், முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டைகள், புதிய குடும்ப அட்டைகள் போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், வருவாய் கோட்டாட்சியர் சங்கர், பட்டுக்கோட்டை நகர்மன்ற தலைவர் சண்முகப் பிரியா செந்தில்குமார், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பி.பழனிவேல், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பெ.மணிமாறன், வட்டாட்சியர்கள் முனைவர் கா. தர்மேந்திரா (பட்டுக்கோட்டை), நா.சுப்பிர மணியன் (பேராவூரணி), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மா.சாமிநாதன், ஜி.செல்வேந்திரன், சோ. நாகேந்திரன், ஆர்.மனோகரன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

மதுரையில் பா.ஜ.க. நடத்திய மாநாட்டில் பங்கேற்ற

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் வெட்கப்பட வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



**புதுக்கோட்டை. ஜூன் 25 -**

**புதுக்கோட்டை திருக்கோகரணத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகள் தங்களது வேளாண் கருவிகளை பழுது நீக்கும் பராமரிப்பு தொடர்பான முகாம் நடைபெற்றது.**

**முகாமில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாவட்ட ஆட்சியர் அருணா உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர்.**

**இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-**

இங்கு உள்ள எல்லோரும் இந்துக்கள் தான். இந்தியாவில் இந்துக்கள் தான் அதிகம்.

ஆனால் இங்கு தேவை சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு தான், எந்த இந்துக்களை இங்கு வாழவிடவில்லை, என்று பவன் கல்யாண் சொல்ல வேண்டும்.

ஆந்திராவில் வேண்டுமானால் அது போல் பிரச்சினை, தமிழகத்தில் அதுபோன்ற பிரச்சினைகள் இல்லை.

ராமா ராமா என்று கோஷம் போட்டவர்களை இன்று முருகா என்று கோஷம் போட வைத்துள்ளது. திராவிட மாடல் அரசின் சாதனை. இந்து சமய அறநிலையத் துறை இல்லை என்றால் தமிழ்நாட்டில் ஆலயங்களை இருந்திருக்காது. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றது வெட்கக்கேடானது.

அ.தி.மு.க. என்ற பெயர் வைத்து கொள்வதற்கே தகுதியற்றவர்கள், திராவிடத்திற்கு எதிராகத்தான் இந்த மாநாட்டை அவர்கள் நடத்தி உள்ளனர்.

உச்சநீதிமன்றம் மணல் குவாரிகளை திறக்க அனுமதி கொடுத்துள்ளது, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்று விரையில் சட்டப்படி மணல் குவாரிகள் திறக்கப்படும்.

தமிழ்நாட்டில் ட்ரிபிள் இஞ்சின் சர்க்கார் எல்லாம் அமையாது ஒரே இஞ்சின் சர்க்கார் தான்... தமிழிசை ட்ரிபிள் என்ஜின் சர்க்கார் அமையும் என்று கூறியதற்கு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்தார்.

இங்கு சிறுபான்மை மக்களுக்கு தான் பாதுகாப்பு வேண்டும் பெரும்பான்மை மக்களிடம் இருந்து, அதுதான் அரசியல் கடமை, அந்தக் கடமையை செய்கின்ற அரசு திமுக அரசு. அந்த கடமையிலிருந்து தவறுகின்ற அரசு மத்திய அரசு. எந்த இந்துக்களை இங்கு வாழ விடவில்லை என்று அவர் சொல்லட்டும் பவன் கல்யாண் உள்ள ஆந்திராவில் வேண்டுமானால் அது போன்ற சம்பவம் நடந்திருக்கலாம் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

பவன் கல்யாண் ஆந்திராவை போய் பார்க்கட்டும். தமிழ்நாட்டில் பவன் கல்யாண் தனது சித்து வேலையெல்லாம் காண்பிக்க முடியாது. அதற்கு தகுந்த இடம் இது அல்ல. அங்கு வெங்கடாஜலபதியை சொல்வார்கள் . இங்கு வந்து புதுசாக முருகன் கோசம் போட்டு உள்ளார் பவன் கல்யாண் போல் இரட்டை வேடம் போடுபவர்கள் நாங்கள் அல்ல. அண்ணாமலைக்கு தெரிந்த வசனங்களை பேசி உள்ளார் சாட்டை அடி சவுக்கடி இது எல்லாம் அண்ணாமலைக்கு தெரிந்த வசனம்.

வசனங்களைத் தான் அண்ணாமலை அந்த மாநாட்டில் உச்சரித்துள்ளாரே தவிர தமிழக மக்களின் மனநிலையை அவர் உச்சரிக்கவில்லை.

இதுவரை ராமா ராமா என்று கோஷம் போட்டவர்களை முருகா முருகா என்று கோஷம் போட வைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

நாங்கள் ஆன்மீகத்திற்கு எதிரானவர்களாக இருப்போமேயானால் இவர்கள் இன்று முருகவேசம் போட்டிருக்க முடியாது. ஆன்மீகம் இங்கு தலைத்திருக்கிறது என்ற காரணத்தினால் தான் தமிழ் கடவுள் முருகனை தமிழர்களின் இதயத்தில் ஏந்தி உள்ளார்கள் என்ற காரணத்தினால் தான் தமிழர்களுக்கு யார் வேஷம் போடுகிறார்கள் யார் உண்மையானவர்கள் என்பது தமிழக வாக்காளர்களுக்கு நன்றாக தெரியும். இந்த வேடதாரிகளை அவர்கள் நம்ப மாட்டார்கள்.

**உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க. தோல்வி!**

அயோத்தியில் என்ன ஆச்சு, அங்கு இந்தியா கூட்டணியில் தான் வெற்றி பெற்றது உத்திரபிரதேசம் என்ன ஆச்சு,

ராமர் பிறந்த மண்ணிலே வென்றது இந்தியா கூட்டணி பா.ஜ.க. அல்ல.

2026 தேர்தலுக்கும் நேற்று நடந்த கூட்டத்திற்கும் சம்பந்தமில்லை. தமிழ்நாட்டு வாக்காளர்கள் இந்துக்களாக இருந்தாலும் இஸ்லாமியர்களாக இருந்தாலும் கிருத்தவர்களாக இருந்தாலும் பௌத்தர்களாக இருந்தாலும் தங்கள் மனசாட்சி அவர்களுக்கு நன்றாக தெரியும்.

யார் தமிழ்நாட்டை ஆண்டால் பாதுகாப்பு யார் தமிழ்நாட்டை ஆண்டால் அமைதியாக இருக்கும் யாரிடத்தில் அதிகாரம் இருந்தால் நன்றாக இருக்கும் உணர்ந்து தமிழகத்தின் வாக்காளர்கள் வாக்களிப்பார்கள். இவர்களின் போலி வேடம் எடுபடாது. தமிழ் கடவுள் முருகனை பா.ஜ.க. இந்து முன்னணியினர் ஐகான் செய்து எங்கு கொண்டு போவார்கள்.

தமிழ்நாட்டை விட்டு முருகனை எங்கும் கொண்டு செல்ல முடியாது. வேறு மாநிலங்களில் முருகன் கோஷம் போட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு கோஷம் இருக்கிறது. கேரளாவில் ஐயப்பனுக்கும், ஆந்திராவில் வெங்கடாசலபதிக்கும் மைசூரில் சாமுண்டீஸ்வரிக்கும் தான் கோஷம் போட முடியும். அதனால் முருகனை தமிழ்நாட்டை விட்டு கடத்திச் செல்ல முடியாது அவர் நம்மிடம் தான் இருப்பார். நம்மோடு தான் இருப்பார்.

2026-ஆம் ஆண்டு தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் எதுவும் பிரிந்து போகாது. கூடுதல் தொகுதி கொடுப்பது என்பது பேச்சுவார்த்தையின் போது முதல்வர் முடிவெடுப்பார்.

வடமாநிலங்களில் சென்று நடைமுறைப்படுத்தி காட்டட்டும் இங்கு நாங்கள் எந்தவித மத கலாச்சாரத்திற்கும் இடம் கொடுக்க மாட்டோம். அனைத்து மாணவர்களும் ஒன்றுதான் அவர்கள் அண்ணன் தம்பிகளாக தான் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கிறார்கள். அனைத்து மாநிலங்களிலும் கலாட்டாவை உருவாக்கி அங்கு பயங்கர வாதத்தை உருவாக்கி சண்டை சச்சரவை உருவாக்கி சந்தடி சாக்கில் நுழைந்தார்கள். அப்படி பா.ஜ.க.வினர் தமிழ்நாட்டில் நுழைவதற்கு திராவிட மாடல் அரசு எந்த காலத்திலும் அனுமதிக்காது. அடித்து விரட்டப்படுவார்கள்.

எந்த குவாரி உரிமையாளர்களையும் கட்டாயப்படுத்தி வசூல் செய்யவில்லை அப்படி புகார் வந்தால் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கின்றோம். மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி தான் நிலவரி எல்லாம் போடப்பட்டுள்ளதை தவிர வேறு எந்த கட்டணமும் கூடுதலாக யாரிடமும் வசூலிக்கவில்லை. ஆதாரம் இருந்தால் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

---

# "திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி கல்வியில் முன்னேறுங்கள்!"

## கலைஞர் நூலக மாணவர் சந்திப்பில் கழக இளம் பேச்சாளர் எஸ்.மாறன் பேச்சு!





சென்னை,ஜூன் 25-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாளையொட்டி, சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 117-வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக சமீபத்தில் நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் எஸ்.மாறன் கலந்துகொண்டு, கல்வியின் அவசியம் குறித்து மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

மேலும், "குலத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான கல்வித் திட்டத்தை ராஜாஜி வகுத்தார். திராவிட இயக்கத்தின் போராட்டத்தால் அந்த பாகுபாடான கல்வி முறை ஒழிந்தது. தற்போது, ஒன்றிய பா.ஜ.க. அரசு அதே போலத்தான் புதிய கல்விக் கொள்கையை கொண்டு வருகிறது. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வியை அழிக்க ஆரியக் கூட்டம் எந்த வேடத்தில் வந்தாலும், தி.மு.கழகம் அதை எதிர்த்துப் போராடும். ஆரியத்திற்கு நேரெதிராக, கல்வியை மேம்படுத்த பல திட்டங்களைத் தீட்டியுள் ளார் நமது திராவிட மாடல் முதல்வர். அத்திட்டங்களை சரியாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டியது மாணவர்களின் கடமை" என உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் என்.மோகன்வேல், ஜே.எம்.எச்.இம்ரான், பகுதி அமைப்பாளர்கள் வ.வேல்குமார், புவனேஷ் ஸ்ரீ வட்சன், பகுதி துணை அமைப்பாளர்கள் சந்துரு, எஸ்.பிரதீப், ஆ.ப.கதிரவன், ஆர்.ராஜேஷ் (எ) காந்தி, சி. தனுஷ் கோடி ஆதித்யன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---

# கலைஞர் நூலகத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு

## மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முயற்சி!





சென்னை, ஜூன் 25 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாளையொட்டி, சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் -துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 109-வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக சமீபத்தில் நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் வி.பாலமுருகன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் நூலகத்தின் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார். சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் என்.மோகன் வேல், பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார், பகுதிக் கழக துணை அமைப்பாளர்கள் சுரேஷ், ஆர். ராஜேஷ் (எ) காந்தி, சி.தனுஷ்கோடி ஆதித்யன், ஸ்ரீதர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---



புதுக்கோட்டை மாநகரம் 14வது வட்டக் கழகப் பிரதிநிதி பூபதியின் இல்லம் சமீபத்தில் பெய்த கனமழையால் சேதமடைந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகளை ஏற்படுத்தி கொடுத்தார். உடன் புதுக்கோட்டை மாநகரக் கழக பொறுப்பாளர் வே.ராஜேஷ் மற்றும் மாநகரக் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.